**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

u/s 173 BNS முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 154 இன் கீழ்)~~

C 8213039

1. District : கிருஷ்ணகிரி    PS: ஊ.த.க.பி.கிரி    Year: 2025    FIR No.: 02/AC/2025    Date: 15.02.2025
மாவட்டம்    காவல்நிலையம்    ஆண்டு    மு.த.அ. எண்    நாள்

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச்சட்டம், 1988    Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு திருத்தச்    Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: சட்டம் 2018    Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from நாள் முதல்: 12.02.2025    Date to நாள் வரை: 14.02.2025
Time Period : நேர அளவு    Time from நேரம் முதல்: சுமார் 10.30 மணி    Time to நேரம் வரை: சுமார் 11.00 மணி
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.02.2025    Time நேரம் : 05.45 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-I    Time நேரம் : 06.45 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 50 கி.மீ. மேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Boat Number : —    (b) Address : உதவி மின் பொறியாளர் அலுவலகம், சிப்காட், ஓசூர்.
முறைக் காவல் எண்    முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —    District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : R.ராஜேந்திரன்    (b) Father's/ Husband's Name : ராஜாமணி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்    தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 35    (d) Nationality : நாட்டினம் இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —    Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் தனியார் துறை    (g) Address : முகவரி கதவு எண்.10-795, சிங்கோட்டை அஞ்செட்டி தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. பிரபாகரன், வணிக ஆய்வாளர், உதவி மின்பொறியாளர் அலுவலகம், சிப்காட், ஓசூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விபரம் தனித் தாள்களில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Rajendiran 15/02/2025

15/02/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

15.02.2025 at 0845 hrs

Name: பெயர் S. விஜய்
Rank: நிலை ........................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
உ.ந.க. பிரிவு,
கிருஷ்ணகிரி.

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 2/AC/2025, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC amendment Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12-ன் தொடர்ச்சி.

இன்று 15.02.2025-ம் தேதி காலை 05.45 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டி வட்டம், சீங்கோட்டை கிராமத்தை சேர்ந்த திரு.ராஜாமணி மகன் திரு.R.ராஜேந்திரன் என்பவர் கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர் R.ராஜேந்திரன், S/O ராஜாமணி, கதவு எண்.10-795, சீங்கோட்டை, அஞ்செட்டி தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு பிரிவு, கிருஷ்ணகிரி மாவட்டம். ஐயா, எனது சொந்த ஊர் சீங்கோட்டை கிராமம் ஆகும். நான் ஓசூரில் சுமார் 13 வருடங்களாக வாடகை வீட்டில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு திருமணமாகி ஒரு மகளும், மகனும் உள்ளனர். நானும் எனது மனைவி புனிதவள்ளியும் பெங்களூரில் உள்ள நாராயணா ஹெல்த் சிட்டி மருத்துவமனையில் வேலை செய்து வருகிறோம். நானும் எனது மனைவி புனிதவள்ளியும் இருவர் பெயரிலும் கூட்டாக கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், கோவிந்த அக்ரஹாரம் கிராமத்திலுள்ள பிருந்தாவன கார்டன் Phase-II-ல் உள்ள வீட்டுமனை எண்.14-ஐ புஷ்பா என்பவரிடமிருந்து 16.09.2024 அன்று 12 லட்சம் ரூபாய்க்கு விலைக்கு வாங்கி அதில் லோன் போட்டு புதியதாக வீடு கட்டி வருகிறோம். அந்த வீட்டுக்கு புதிய EB சர்வீஸ் பெறுவதற்காக 22.01.2025 அன்று தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஆன்லைனில் விண்ணப்பம் செய்து, கட்டணம் ரூ.13,300/- ஆன்லைனில் கட்டியிருந்தேன். அந்த விண்ணப்பத்தின் பேரில் இரண்டு மூன்று நாட்களுக்கு பின் ஓசூர் சிப்காட் மின்வாரிய AE மற்றும் CI ஆகியோர் நாங்கள் புதியதாக கட்டி வரும் வீட்டுக்கு நேரில் வந்து விசாரணை செய்துவிட்டு கூடுதலாக மின் கம்பங்கள் நட வேண்டும் என்றும், அதன்பிறகே சர்வீஸ் கொடுக்க முடியும் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டனர். அதன் பிறகு இரண்டு வாரங்களாகியும் EB சர்வீஸ் கனெக்சன் கொடுக்காததால் அது பற்றி விசாரிக்க 12.02.2025-ம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு ஓசூர் சிப்காட் மின்வாரிய அலுவலகத்திற்கு நேரில் சென்று அங்கிருந்த CI

பிரபாகரன் என்பவரிடம் விசாரித்த போது, அவர் AD அவர்களை பார்த்து கேட்குமாறு சொன்னார். எனவே நான் AD திரு.விமல் என்பவரை நேரில் பார்த்து கேட்ட போது, நீங்க CI-யிடமே போய் பேசுங்கள் என்று சொன்னார். எனவே நான் மீண்டும் அங்கிருந்த CI பிரபாகரனிடம் சென்று AD அவர்கள் சொன்னதை அவரிடம் சொன்ன போது அவர் என்னிடம் பணம் ரூ.35,000/- செலவாகும் என்றும், நீங்கள் நாளைக்கு ஆபீசுக்கு வந்து என்னை பாருங்கள் என்றும் சொல்லி என்னை அனுப்பிவிட்டார். மறுநாள் நான் வேலைக்கு போய்விட்டதால், 14.02.2025-ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு ஓசூர் சிப்காட் மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த CI பிரபாகரனிடம் பேசியபோது அவர் என்னிடம், உங்களுக்கு EB சர்வீஸ் கொடுப்பதற்கு சைட் இன்ஸ்பெக்ஷன் முடிச்சாச்சு, நான் எஸ்டிமேசன் போட்டுக் கொடுத்ததும் ஆன்லைனில் பணம் கட்ட வேண்டும், அத்துடன் ஆபீஸ் வேலைகளுக்கு தனியாக என்னிடம் பணம் தர வேண்டும் என்றும் சொன்னார். அதற்கு நான் எவ்வளவு பணம் கட்ட வேண்டும் என்று அவரிடம் கேட்ட போது, அவர் ஆன்லைனில் பீஸ் சுமார் 50 ஆயிரம் ரூபாய்வரை வரும் என்றும், எஸ்டிமேசன் போட்டுத்தான் கரெக்டாக சொல்லமுடியும் என்றும், அது போக ஆபீஸ் வேலைகளுக்கும், புதிய மின் கம்பங்கள் நட்டு கொடுப்பதற்கும் தனக்கு தனியாக 35 ஆயிரம் ரூபாய் பணம் லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும், அதில் குறைத்து சொன்னால் நான் பணம் ரெடி பண்ணிட்டு வர்றேன் என்றும் அவரிடம் கேட்ட போது, அப்படின்னா அதில் 5,000/- ரூபாய் குறைச்சிட்டு 30,000/- ரூபாய் கொடுத்து விடுங்கள் நான் மொத்த வேலைகளையும் முடித்துத் தருகிறேன் என்றும் சொன்னார். பணத்தை சீக்கிரம் ரெடி பண்ணி கொடுத்தால் விரைவில் EB சர்வீஸ் கனெக்சன் தருவதற்குண்டான ஏற்பாடுகளை செய்கிறேன் என்றும், அதனால் தான் கேட்ட பணத்துடன் தன்னை நாளைக்கு ஆபீசில் வந்து பார்க்குமாறும் சொல்லி அனுப்பிவிட்டார். என்னிடம் ஓசூர் சிப்காட் மின்வாரிய CI பிரபாகரன் என்பவர் லஞ்சமாக கேட்ட ரூ.30,000/- பணத்தை கொடுத்து எனது வீட்டுக்கு புதிய EB சர்வீஸ் கனெக்சன் பெறுவதற்கு எனக்கு விருப்பமில்லை. ஆகவே அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.30,000/-த்துடன் நாளை அவரைப் போய் பார்க்க தயாராக உள்ளேன். எனவே, என்னிடம் லஞ்சம் கேட்ட ஓசூர் மின்வாரிய CI பிரபாகரன் மீது சட்டப்படியான

நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) ராஜேந்திரன்.R 15.02.2025.

Sir, a computer typed complaint has been received by me on 15.02.2025 at 05.45 hrs. Further a quick verification on the general reputation of the accused Tr.Prabhakaran has been made and it is learnt to be not good and motive and antecedents of the informant have been checked and found nothing adverse. Therefore, a case in Krishnagiri V&AC Cr.No.2/AC/2025 u/s 7 (a) of the PC Act, 1988 as amended by the PC Amendment Act, 2018 was registered today 15.02.2025 at 06.45 hrs against the accused Tr.Prabhakaran. The original FIR and complaint is sent to the Hon'ble Court of Special Judge cum Chief Judicial Magistrate, Krishnagiri and remaining copies are sent to the officers concerned.

15/02/25

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கிருஷ்ணகிரி.